செய்தி வெளியீடு எண். 209 நாள்: 18.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் இலவச மற்றும் கட்டாயக் கல்வி 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த குழந்தைகள் சேர்க்கப்பட்டு வருகின்றனர் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12 (1) (சி)-ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைச் சேர்க்கை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்பொருட்டு அரசால் ஏற்கனவே வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு 2013-2014-ம் கல்வியாண்டு முதல் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த குழந்தைகள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் வகையிலும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன்பெறும் வகையிலும், வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் பொருட்டும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுடன் கீழ் குறிப்பிடப்பட்டு வழிகாட்டுதல்களும் கூடுதலாக அரசால் வழங்கப்படுகிறது.

எதிர் வரும் 2017-2018-ம் கல்வியாண்டிற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் மெட்ரிக் பள்ளிகள் எண்ணிக்கை - 322, 25% ஒதுக்கீடு எண்ணிக்கை - 5138, மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிகள் எண்ணிக்கை - 336, 25% ஒதுக்கீடு எண்ணிக்கை - 3315, மாவட்டத்தில் உள்ள மொத்த 25% ஒதுக்கீடு - 8453.

நுழைவு (LKG/ I Std) வகுப்பில் 25% ஒதுக்கீட்டின் கீழ் 8453 இடங்களுக்கான மாணவர் சேர்க்கை இணைய வழியில் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான வசதி www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள் அவரவர் இருக்கும் இடத்தில் இருந்தே இதற்கான விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம். விண்ணப்பம் வெற்றிகரமாகப் பதிவேற்றம் செய்யப்பட்ட விபரம், பதிவி செய்யப்பட்ட பெற்றோரின் கைபேசி எண்ணிற்குச் குறும் செய்தியாக அளிக்கப்படும்.

முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் / மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் / உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்/ வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஆகியோரது அலுவலகங்களில் எவ்விதக் கட்டணமும் இல்லாமல் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம்.

இந்த மாவட்டத்திலுள்ள அரசு இ-சேவை மையங்களில் ரூ.50/- கட்டணம் செலுத்தி பதிவேற்றம் செய்வதற்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட இடங்களை விட அதிகமாக விண்ணப்பங்கள் பெறப்படின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.

வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, ஆதரவற்றவர்/எச்.ஐ.வி பாதிக்கப்பட்டவர்/மூன்றாம் பாலினத்தவர்/ துப்புரவு தொழிலாளியின் குழந்தை/ மாற்றுத்திறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்படும் தகுதியான விண்ணப்பங்களுக்குக் குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே சேர்க்கை வழங்கப்படும்.

ஏப்ரல் 20 ம் தேதி முதல் மே 18ம் தேதி வரை இணைய வழியில் விண்ணப்பிக்கலாம்.

மேற்காணும் வழிகாட்டுதலின்படி சமுதாயத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் சேரும் வாய்ப்பினைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~